**<u>மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள்</u>**

**<u>பிறப்பிப்பவர்: திரு. இரா.சந்திரசேகர்.எம்.எஸ்.சி.,</u>**

<u>ந.க.எண்.பஅ3/4314/2024</u> <u>நாள்: 29.05.2024</u>

பொருள் **பயிற்சி** - அரசு அலுவலர் பயிற்சி நிலையம் - பவானிசாகர்- இளநிலை உதவியாளர் / உதவியாளர் - உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட பயிற்சி- 62-வது அணி - 08.06.2024 முதல் 27.07.2024 வரை- தகுதியுடைய அலுவலர்களை பயிற்சியில் கலந்து கொள்ள அனுமதித்து ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: ஈரோடு, பவானி சாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், மாவட்ட வருவாய் அலுவலர்/முதல்வர் அவர்களின் கடித எண்:அ3/2323/2024, நாள்: 07.05.2024.

**<u>ஆணை:</u>**

பார்வையில் கண்டுள்ள பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய முதல்வரின் கடிதத்தில், மதுரை மாவட்ட வருவாய் அலகில் பணிபுரியும் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களில் முதுநிலைப்படி தகுதியான 05-(ஐந்து) பயிற்சியாளர்களை பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் சுருக்கப்பட்ட அடிப்படைப்பயிற்சியின் 62-வது அணிக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | பயிற்சி மையம் |
|---|---|
| மதுரை (அணி எண்:62) | அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானி சாகர், ஈரோடு மாவட்டம். |

2) மேற்படி பயிற்சிக்கு, மதுரை மாவட்ட வருவாய் அலகில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களில் முதுநிலைப்படி, 05 பணியாளர்களை ஒதுக்கீடு செய்தும், கீழ்கண்ட பயிற்சியாளர் 07.06.2024 அன்று முற்பகல் 09.00 மணிக்குள் பயிற்சி மையத்தில் ஆஜராக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, மதுரை மாவட்ட வருவாய் அலகில் பணிபுரியும் கீழ்கண்ட அலுவலர்களை 08.06.2024 முதல் 27.07.2024 வரை நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்துகொள்ள அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் (திருவாளர்கள்) | பதவி | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | பா.பெரியபுலியன் | இ.நி.உ. | 04.12.2020 | வட்டாட்சியர் அலுவலகம், மேலூர் வட்டம். |
| 2. | க.இளையராணி | இ.நி.உ. | 20.10.2021 பி.ப. | வட்டாட்சியர் அலுவலகம், மேலூர் வட்டம். |
| 3. | சி.சிவகருப்பு | இ.நி.உ. | 22.10.2021 | வட்டாட்சியர் (கு.பொ) அலுவலகம், மதுரை மத்திய சரகம். |
| 4. | வி.ஹேமராஜன் | இ.நி.உ. | 20.03.2023 | வட்டாட்சியர் அலுவலகம், பேரையூர் வட்டம். |
| 5. | பி.முத்துக்குமார் | இ.நி.உ. | 20.03.2023 | வட்டாட்சியர் அலுவலகம், மதுரை வடக்கு வட்டம். |

கீழ்க்கண்டுள்ள பயிற்சிக் கட்டணத் தொகையை இணைய வழியாக மட்டுமே செலுத்த வேண்டும்.

| வரிசை எண் | கட்டண விவரம் | பயிற்சியாளர்கள் செலுத்த வேண்டிய மொத்த தொகை (ரூ.) | குழந்தை களுடன் தங்குபவர்கள் செலுதத வேண்டிய மொத்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | உணவக முன் பணம் (இத்தொகை தற்காலிகமானது விலை ஏற்றத்தைப் பொறுத்து கூடுதல் தொகை செலுத்த நேரிடலாம்) | 6000 | 6000 |
| 2. | அறை வாடகை (50 நாட்கள் x ரூ.60) | 3060 | (51 நாட்கள் x.ரூ.120) 6120 |
| 3. | பஞ்சாயத்து நிதி | 120 | -- |
| 4. | பராமரிப்பு நிதி (50 நாட்கள் x ரூ.5) | 255 | -- |
| 5. | காப்புத்தொகை (திரும்ப வழங்கக் கூடியது) | 100 | -- |
| 6. | பயிற்சி கையேடு | 570 | -- |
| 7. | சுத்தம், சுகாதாரக்கட்டணம் | -- | 1500 |
| | மொத்தம் | 10,105 | **13,620** |

3) இப்பயிற்சி நிலைய இணையதளத்தில் (www.cstibhavanisagar.in-> Online Admission) இணைய வழியாக (20.05.2024 அன்று காலை 9.00 மணி முதல் 29.05.2024 மாலை 5.00 மணி வரை) பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து மேற்கண்டுள்ள பயிற்சிக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்த வேண்டும். தொகை செலுத்திய UTR எண்ணை முகப்பு விண்ணப்பத்தில் மறவாமல் குறிப்பிட வேண்டும்.

**அனைத்துப் பயிற்சியாளர்கள் கட்டாயம் கொண்டு வர வேண்டிய பொருட்கள்**

| | | |
|---|---|---|
| 1 | நீலநிற டி-சர்ட், நீலநிற பேண்ட் (ஆண்கள்) (விளையாட்டு/சிரமதானம்) | 2 Set |
| 2 | மெரூன் நிற டி-சர்ட், மெரூன் நிற பேண்ட்(பெண்கள்) (விளையாட்டு/சிரமதானம்) | 2 Set |
| 3 | வெள்ளை நிற கான்வாஷ் ஷீ (1 செட்) மற்றும் கருநீல நிற சாக்ஸ் (2 செட்) | 1 Set |
| 4 | விளையாட்டுப் பயிற்சிக்கு தனியே (Indoor Non Marked Shoe) -1 செட் மற்றும் சாக்ஸ்-2 செட் (அனைவரும் கட்டாயமாக கொண்டு வரவும்) | 1 Set |
| 5 | பக்கெட் பெரியது மற்றும் மக் சிறியது | 1 எண் (Each) |
| 6 | போர்வை, கம்பளி, ஸ்வெட்டர், ஸ்கார்ப் | 1 எண் (Each) |
| 7 | எவர்சில்வர் கப், தட்டு, டம்ளர் மற்றும் ஸ்பூன் | 1 எண் (Each) |
| 8 | டார்ச் விளக்கு மற்றும் குடை | 1 எண் |
| 9 | நோட் மற்றும் பால்பாயிண்ட் பேனா | 10 எண்கள் |
| 10 | கால்குலேட்டர் | 1 எண் |
| 11 | யோகா மேட் | 1 எண் |
| 12 | ரப்பர் கையுறை | 2 செட் |
| 13 | 6 அடுக்கு டிபன் கேரியர் (குழந்தையுடன் வரும் பயிற்சியாளர் மட்டும்) | 1 எண் |
| 14 | பகிர்மானப் பதிவேடு / தன்பதிவேடு / காலமுறைப்பதிவேடு / நினைவூட்டு நாட்குறிப்பேடு - தலா - 20 பக்கங்கள் வீதம். | 1 Set (Original or Xerox) |

4) இத்துடன் பயிற்சிக்கான அறிவுரைகள் இணைப்பு-I இணைக்கப்பட்டுள்ளது, அதன்படி பயிற்சிக்கு செல்லும் அனைத்து அலுவலர்களும் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது. ஒப்பந்தப்பத்திரம் உரிய படிவத்தில் பயிற்சியாளர்கள் தங்களது இரண்டு மாத சம்பளம் அல்லது குறைந்தது ரூ.70,000/-க்கு குறைவில்லாமல் ஒரு ஒப்பந்தப்பத்திரத்தை தயாரிக்க வேண்டும். இரண்டு பிரதிகள் தயார் செய்து சாட்சிகள் பிணையதாரர் மற்றும் அலுவலகத் தலைவர் ஆகியோரால் முறையாக கையொப்பம் இடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஒரு பிரதியை பயிற்சி சேர்க்கை அன்று தவறாது நேரில் சமர்ப்பிக்க வேண்டும். மற்றொரு பிரதியை அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

5) பயிற்சிக்கு முறையான படிவத்தில் ஆளறி அடையாள சான்றுடன் கூடிய பணி விடுவிப்பு ஆணையினை பயிற்சியாளர் பயிற்சி சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும். பயிற்சியாளரை அடையாளம் காணும் விதத்தில் பயிற்சியாளரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் பணிவிடுவிப்பு ஆணையில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, முறையே அலுவலகத்தலைவரால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். நடைமுறையில் உள்ள விதிகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்/ நேரடி நியமன உதவியாளர் ஆகியோர் உரிய அலுவலரால் வழங்கப்பட்ட பணிவரன்முறை செய்யப்பட்ட உத்திரவின் நகலை சேர்க்கை நாளன்று சமர்ப்பித்தல் வேண்டும். பணிப்பதிவேட்டில் உள்ள பதிவு நகல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது உத்திரவு நகல்களை வைத்தே சேர்க்கை மேற்கொள்ளப்படும். இது பயிற்சியின் மிக முக்கிமான ஆவணம் ஆகும்.

6) பயிற்சியில் கலந்துகொள்ளும் அலுவலர்கள் <u>07.06.2024 முற்பகல் 9.00</u> மணிக்குள் தவறாது பயிற்சி நிலையத்தில் ஆஜராகவேண்டும் என்பதால், அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் ஆஜராவதற்கு ஏதுவாக <u>06.06.2024 பிற்பகல்</u> பணியிலிருந்து விடுவித்து, அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறும், மேலும் பயிற்சியாளர் விடுவிக்கப்படும் போது, அவருக்கு போதுமான பயண முன்பணம் வழங்குமாறும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7) பயிற்சிக்கு செல்லும் நபருக்கு, பதிலி நியமனம் வழங்கக்கூடாது என அரசின் விதிமுறைகள் இருப்பதால், சம்பந்தப்பட்ட இருக்கையினை கூடுதல் பொறுப்பு மூலம் பராமரிக்கும்படி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சி **27.07.2024 அன்று** முடிந்ததும், மீண்டும் அதே இடத்தில் பணியேற்குமாறு சம்பந்தப்பட்ட நபர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**: அறிவுரைகள் (இணைப்பு-I)

(ஒம்.) இரா.சந்திரசேகர்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
மதுரை.

/நே.ப.ஆ.ப/

29.5.24
அலுவலக மேலாளர்(பொது)

29.5.24

பெறுநர்:

சம்பந்தப்பட்ட நபர்.

*நகல்*: முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்-638451, ஈரோடு மாவட்டம்.

நகல். வட்டாட்சியர், மேலூர் வட்டம்